
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-19 இதழ்-3 மார்ச் - 2006



கிறிஸ்துவின் சபை


தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஏலகிரி முகாமிற்கு வாருங்கள் 2
3. ஆதியிலிருந்தே இருக்கும் கிறிஸ்து ........ 10
4. பெண்கள் பகுதி ........ 15
5. வாலிபர் பகுதி ........ 19
6. சிறுவர் பகுதி ........ 22
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
8. நீ அங்கே கன்மலையில் நில்லு ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 March - 2006 Issue - 3

ஆசிரியர் உரை

## என்னத்தைச் செலுத்துவேன்?

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில், ஒரே பொருளைத் தரும் வித்தியாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவர்களாகவே உள்ளோம். ஆயினும், அப்படிப்பட்ட வார்த்தைகளை, ஒருவேளை அது ஒரே பொருளைக் கொடுக்கக் கூடியவைளாக இருந்தாலும், அவைகளை எல்லா இடங்களிலும் ஏகமாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அப்படிப் பயன்படுத்துவது சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவோ அல்லது பொருள் பொதிந்ததாகவோ இருக்காது. உதாரணமாக, "நீர்" "உமது" மற்றும் "நீங்கள்" "உங்களுடைய" போன்ற வார்த்தைகள் ஒரே பொருளைத் தருபவைகளாக இருந்தாலும், முதல் இரண்டு வார்த்தைகளை நம்மைப் படைத்த தேவனுக்கும், அடுத்த இரண்டு வார்த்தைகளை நம்மைப் போன்ற சக மனிதர்களுக்குமே பயன்படுத்துகிறோம். இப்படி வார்த்தைகளை வகைப்படுத்தி பயன்படுத்துவதை மொழி அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றாக நாம் கருதாமல், படைத்தவருக்குக் காட்டும் மரியாதையாகவும், அவரிடம் நாம் கொண்டுள்ள பக்திக்கு அடையாளமாகவுமே எண்ணுகிறோம்.

நமது தலைப்பில் இடம் பெற்றுள்ள **செலுத்துவேன்** என்ற வார்த்தையைக் கூட நாம் இந்த அடிப்படையில் தான் பார்க்க வேண்டும். அதாவது, இச்சங்கீதக்காரனால், தேவனுக்காக விசேஷமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதென்றே பார்க்க வேண்டும். ஆம், 116-ம் சங்கீதத்தின் ஆசிரியர், தேவனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல எண்ணினபோது, "என்னத்தைக் கொடுப்பேன்" என்று வழக்கமான வார்த்தைகளைக் கொண்டு சாதாரணமாகச்

சொல்லாமல், மரியாதையும், பயபக்தியும் கலந்த அளவில், **என்னத்தைச் செலுத்துவேன்** என்றே கூறியுள்ளன். அவன் தேவனுக்காக பயன்படுத்திய வார்த்தைகள், அவன் யார் என்பதையும், எப்படிப்பட்ட தன்மை கொண்டவர் என்பதையும் நமக்குக் காட்டுகிறது.

இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்புக்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து, பிறகு தொடருவோம்.

150 பாடல்களைக் கொண்ட சங்கீதப் புத்தகம் அனைத்தும் தாவீது அரசனாலே பாடப்பட்டது என்று பெரும்பாலோர் பொதுவாக எண்ணினாலும், உண்மையில் அவை ஏழு ஆசிரியர்களைக் கொண்டே பாடப்பட்டுள்ளது. அவர்கள் தாவீது, ஆசாப், கோராகின் புத்திரர், சாலமோன், மோசே மற்றும் எஸ்ராயர்களாகிய ஏமான், ஏத்தான் என்பவர்கள், இந்த உண்மை தெரியாமல், சங்கீதம் என்றாலே நாம் தாவீது என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. ஆயினும் கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு (73) தாவீது தான் ஆசிரியர். நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116-ம் சங்கீததத்திற்கான ஆசிரியர் யார் என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும், தாவீதாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏறக்குறைய ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

இன்னும், 150 பாடல்களைக் கொண்ட சங்கீத புத்தகத்தை நாம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. போதனை சங்கீதம், 2. துதி சங்கீதம், 3. நன்றி சங்கீதம், 4. புலம்பல் சங்கீதம், 5. நம்பிக்கை சங்கீதம், 6. மேசியாவைப் பற்றிய சங்கீதம் 7. ஐயோ சங்கீதம் என்று. இவற்றில் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116ம் சங்கீதம், நன்றி சங்கீதத்தின் கீழ் வரக்கூடிய ஒன்று. இச்சங்கீதத்தையும், வேறு சில குறிப்பிட்ட சங்கீதங்களையும், யூதர்கள் தங்களுடைய முக்கிமான பண்டிகை காலங்களிலே பாடியுள்ளதாக பிறவரலாறும், வேதாகமும் கூறுகிறது: நம்முடைய இரட்சகர் வாழ்ந்த காலத்தில் கூட இச்சங்கீதம் பாடப்பட்டதாக நம்பப்படுகிறது. குறிப்பாக, கர்த்தரின் பந்தி ஆரம்பிக்கப்பட்டபோது, ஆண்டவர் இயேசுவாலும், அவருடைய சீடர்களாலும் பாடப்பட்ட பாடல், இவைகளுள் ஒன்று என்று தான் நம்பப்படுகிறது. (மத். 26:30).

இந்த 116-ம் சங்கீதத்தின் மொழிநடையையும், குறிப்பாக **கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்** என்ற வசனங்களாடங்கிய பகுதியையும், அதிலுள்ள வார்த்தைகளையும், அவைகளுக்கான அர்த்தங்களையும் நாம் கவனித்தால், இதன் ஆசிரியர் ஒரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதினிமித்தம் தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லிப் பாடியுள்ளார் என்று தெரிந்து கொள்ளலாரம்.

இப்படி, ஆபத்திலிருந்து தன்னை விடுவித்த தேவனுக்கு, எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாமல் தடுமாறி, தனக்குத்தானே, தன் இருதயத்தோடு பேசியுள்ளான் என்பதையும் காணமுடியும்.

சரி, இப்பொழுது, சிறப்புமிக்க இச்சங்கீதத்தின் இவ்வசனங்களிலிருந்து, நமக்கு என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்த்துப் பயனடைவோம்.

**I கர்த்தர் நன்மைகளைச் செய்பவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (வ - 12)**

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபகாரங்களைச் செய்கிறவராயிருக்கிறார் என்பது.

இச்சங்கீதக்காரன், வசனம் 12-ல், கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் என்று சொல்வதின் மூலம் தன் வாழ்வில் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்கும் காரணம் தேவாதி தேவன் தான் என்பதை முற்றும் முடிய ஒத்துக்கொள்கிறான். இதே கருத்தை புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியரும் கூறியுள்ளார். "**நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை**" என்று (யாக். 1:17) ஆனால், இவ்வழகிய கருத்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்சங்கீதக்காரனுக்குப் புரிந்துள்ளது.

ஆனால், ஆவியானவரின் துணை கொண்டு இச்சங்கீதக்காரனால் முன்மொழியப்பட்டு, அதே ஆவியானவரால் யாக்கோபு ஆசிரியரால் வழிமொழியப்பட்டிருக்கும் இவ்வேதாகம உண்மையை நம்மில் எத்தனை பேர் அப்படியே ஏற்றுச் செயல்படுகிறவர்களாக உள்ளோம்? சொல்லுங்கள் பார்க்கலாம்! என்னுடைய வாழ்க்கையில் நான் பெற்று அனுபவிக்கிற நன்மைகள் அனைத்தும் எனக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நம்மில் எத்தனை பேர் நினைக்கிறோம்.?

என் உழைப்பின் பலனாக இந்த உயர்வு வந்தது என்றும், என்னுடைய முயற்சியின் விளைவாக அந்த நன்மை கிடைத்தது என்றும், என்னுடைய செல்வாக்கின் காரணமாக அக்காரியம் கை கூடிற்று என்று தானே சொல்லுகிறோம். இன்னும், என்னுடைய அதிர்ஷ்டத்தினால் இந்த யோகம் அடித்தது என்று தானே பீற்றுகிறோம். அப்படித்தானே! ஆமாம்தானே! ஆனால், இச்சங்கீதக்காரனோ, கர்த்தர் எனக்குச் செய்த **எல்லா உபகாரங்கள்** என்று கூறுகிறார். ஆம், ஒருவேளை அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், கர்த்தர் தனக்குச் செய்ததாகவே எண்ணியுள்ளான்.

பக்தன் யோபு கூறுவது போல், "**கர்த்தர் கொடுத்தார்**" (யோபு 1:21) என்றல்லவா எண்ணியிருக்கிறான். நம்மில் எத்தனை பேர் தேவனிடத்தில் நாம் பெற்று அனுபவிக்கிற நன்மைகளுக்காக இப்படிச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்.

அன்பானவர்களே, நம் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக எண்ணிப்பாருங்கள். நாம் வாழ்வதற்குத் தேவையான பல காரியங்கள் இலவசமாகவும், சொற்ப முயற்சியாலும் கிடைப்பதால், கர்த்தர் நமக்குச் செய்யும் மேன்மைகளை நாம் யாரும் அவ்வளவாக உணருவதில்லை. உதாரணமாக, நாம் சுவாசிக்கும் காற்று, நாம் வாழ்வதற்குத் தேவையான சூரிய ஒளி, நாம் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரை தரும் மழை போன்ற இவைகளுக்காக நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு பணம் மாதந்தோறும் செலவிடுகிறோம்? இன்னும், தேவன் **நமக்குக் கொடுக்கும் பெலனைக் கொண்டு** உழைத்துப் பெற்றுக்கொள்ளும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளுக்காக நாம் தேவனுக்கு என்ன கைம்மாறு செய்கிறோம்? தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் நன்மைகளுக்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். பத்து குஷ்டரோகிகளை குணமாக்கின இயேசு, ஒருவன் மாத்திரம் திரும்பி வந்த போது, மற்ற ஒன்பது பேர் எங்கே என்று கேட்டது உங்களுக்கு மறந்து போய் விட்டதா? (லூக். 17:17)

இங்கே, தேவன் மனிதனுக்குச் செய்திருக்கும் நன்மைகளில் மிகப்பெரிய நன்மையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. யோவான் 3:16-ம் வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவன் அடையும்படி **அவரைத் தந்தருளி** இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". ஒருவேளை, அவர் நம் வாழ்வில் செய்த மற்ற நன்மைகளை நாம் மறக்கிறவர்களாக இருந்தாலும், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்த நன்மையை யாராவது மறக்கலாமா? நிச்சயமாக மறக்கக்கூடாது. குமாரனாகிய இயேசுவுக்கும், அவரை அனுப்பின தேவனுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவும், உண்மையுடையவர்களாகவும் இருப்பது இப்பூமியில் பிறந்து வாழும் ஒவ்வொருவரின் கடமை. இதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.

## II. அவருக்கு எதையாவது செலுத்தவேண்டும் (வ - 12)

சங்கீதம் 116:12-13 வசனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக நாம் எதையாகிலும் செலுத்த வேண்டுமென்பது.

சர்வ வல்ல தேவனிடத்திலிருந்து பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட இச்சங்கீதக்காரன், நம்மில் அநேகரைப்போல் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு போகிறபோக்கில் ஒரு "நன்றி" சொன்னால் போதுமென்று எண்ணாமல், பெற்றுக்கொண்டவைகளுக்கு ஈடாக "அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" என்று எண்ணி மலைத்துள்ளான்!.

என்னத்தைச் செலுத்துவேன் என்று இவன் மலைத்து நின்று சொன்னது, இவன் நிலை பற்றி நமக்கு இரண்டு காரியங்களைச் சொல்லுகிறது. முதலாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாகச் செலுத்துவதற்கு என்னிடத்தில் ஒன்றுமே இல்லையே என்று குமுறுவது. இரண்டாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்குப் பதிலாக என்னிடத்தில் இருப்பதில் எதைச் செலுத்தினால் கொஞ்சமாகிலும் கிட்ட நெருங்கும் என்று எண்ணித் தவிப்பது.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்பவைகளுக்கு ஈடாக, நாம் எதையும் ஒருபோதும் செய்துவிட முடியாது என்பது உண்மையே. ஆனாலும், நான் பெற்று அனுபவிப்பவைகளுக்காக, எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருப்பது மிகமிக அவசியம்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். தன்னடைய பழைய வாழ்க்கை பற்றிக் கூறும் போது, "முன்னே நான் தூஷிக்கிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்" என்று கூறுகிறான் (1 தீமோ. 1:13) அப்படிப் பட்ட பவுலை, கிறிஸ்து, அவன் தமஸ்கூ செல்லும் வழியில் சந்தித்துப் பிடித்தார் (அப். 9:3-6). அவன் அனனியாவால் உபதேசிக்கப்பட்டு, பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப். 22:16). பிறகு, இந்தப் பவுல், பிலிப்பிபட்டணத்து சபையாருக்கு நிருபம் எழுதும்போது, "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், **கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படியாக ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுகிறேன்** ...." (பிலி. 3:12,13) என்று கூறுகிறான். ஆம், தன்னைச் சந்தித்த இயேசுவுக்காக, தன் பாவங்களுக்காக இரத்தம் சிந்தின இயேசுவுக்காக, தான் இரட்சிக்கப்பட நற்செய்தியை நல்கிய இயேசுவுக்காக, எந்தளவு நன்றியுடைவனாயிருந்து தன் வாழ்க்கையை அர்ப்பணிந்துள்ளான் என்று பாருங்கள். இன்னும், **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்**. (பிலி. 1:21) என்று சொல்லும் அளவுக்கு தன் நன்றியை கிரியைகளினால் காட்டியுள்ளான் என்பதையும் கவனிக்கத் தவறிவிடாதீர்கள்.

அருமையானவர்களே, நாம் பார்க்கும் இந்த பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் போலவும், நம்முடைய புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, அவர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ண முடையவர்களாக இருக்கிறோமா? ஒருவேளை இதுகாறும் அப்படிப்பட்ட எண்ணமில்லாதவர்களாக இருந்திருப்போமானால், சரி, போகட்டும், இனிமேலாகிலும், தேவனுக்குச் செலுத்த வேணடியவைகளை செலுத்து கிறவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகர், "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று நமக்குச் சொல்லியுள்ளதை நாம் கண்டிப்பாக மறக்கக்கூடாது (மத். 22:21)

## III இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும் (வ-13)

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு முக்கியமான பாடம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது.

கர்த்தர் செய்த உபகாரங்கள் எல்லாவற்றையும் ஒவ்வென்றாக எண்ணி, அதற்கு நன்றியாக எதைச் செலுத்தினால் சரியாக இருக்குமென்று மூளையை கசக்கி பிழிந்து, எதையும் முடிவெடுக்க முடியாத நிலையில் எப்படியோ ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தான் நம் சங்கீதக்காரன். அந்த அரிய தீர்மானம் தான், **இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்வேன்** என்பது. ஆஹா! எப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! வேறு என்ன தீர்மானம் எடுத்திருந்தாலும் இதற்கு ஈடாகுமா அல்லது இணைதான் ஆகுமா? முடியவே முடியாது. சங்கீதக்காரனே, சபாஷ்! சரி இவன், மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவனாதலால், இரட்சிப்பின் பாத்திரம் என்பது, அன்றைய கால கட்டத்தில், பிரமாணங்களினடிப்படையில் தேவன் கட்டளையிட்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் மார்க்க கடமைகளைச் செய்ய தன்னை ஒப்புக் கொடுப்பது தான். ஆம், இச்சங்கீதக்காரன், பொன்னைக் கொடுக்கலாமா, பொருளைக் கொடுக்கலாமா, இதை கொடுக்கலாமா, அதை கொடுக்கலாமா என்று குழம்பிப்போய், இறுதியில் தனக்கிருக்கும் ஒரே வழி **இரட்சிப்பின் பாத்திரம்** என்று கண்டு கொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இந்தப் பழைய ஏற்பாட்டுப் பக்தன், இரட்சிப்பின் பாத்திரம் எடுப்பேன் என்று தீர்மானித்து வாழ்ந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்து, **அவனைக்காட்டிலும் மிக அதிகமான ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியம் உள்ள நாம், இரட்சிப்பின் பாத்திரம்** எடுத்தர்வகளாக

நம்முடைய வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள். இச்சங்கீதத்தின் ஆசிரியர், தாவீது என்று நம்பப்படுவதாலும், அவன் ஒரு அரசனாக இருந்தானென்பது உண்மையாக இருப்பதாலும், அவனுக்கு முன்பாக வேறு பல பாத்திரங்களும் நிச்சயமாக இருந்திருக்கும். அதாவது, உலக இன்பம் என்ற பாத்திரம், உல்லாச வாழ்க்கை என்ற பாத்திரம், நாடு பிடிக்கும் ஆசை என்ற பாத்திரம், சர்வாதிகாரம் என்ற பாத்திரம் என்று பலபாத்திரங்கள் இருந்திருக்கும். ஆனால், இவனோ, பெத்தானியா கிராமத்து மரியாள் போல, **தேவையானது ஒன்றே** என்று தீர்மானித்து, (லூக். 10:42) இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொண்டான்.

அருமையானவர்களே, நம்மில் எத்தனைபேர் இந்த இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து வாழத் தயாராக இருக்கிறோம்? இந்த இரட்சிப்பின் பாத்திரம் நாம் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டுமென்பது தேவசித்தமாக இருக்கிறது. (1 தீமோத். 2:4) மேலும், எபிரெயர் ஆசிரியர், இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் எடுக்காவிட்டால் தண்டனைக்குத் தப்பமுடியாது என்று நம்மைக் கடுமையாக எச்சரிக்கிறார். "ஏனெனில், தேவ தூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப் படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற **இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்.** (எபி. 2:2-4) என்று.

எப்படி இந்த சங்கீதக்காரனை, கடுமையான சரீரச் சூழ்நிலையிலிருந்து தேவன் விடுவித்தாரோ, அதுபோலவே, நம் ஒவ்வொருவரையும் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்கப்படும்படியான சகல காரியங்களையும் நமக்கு கூட்டி வழங்கியுள்ளார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய தேவத்துவத்துள் உள்ள மூவரும், நாம் இரட்சிக்கப்படும்படி தங்கள் பங்கை செய்துள்ளனர். ஆம், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேரான குமாரனை நமக்காகத் தந்துள்ளார் (யோவா. 3:16) குமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய உயிரையே நமக்குக் தந்துள்ளார் (எபே 5:2) பரிசுத்த ஆவியானவர் வேத வசனங்களை நமக்குக் கொடுத்துள்ளார் (யோவா 14:26, 16:13) அப்படியானால், இதற்குக் கைம்மாறாக, நாம் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்க வேண்டியது அவசியமா?, இல்லையா நீங்களே சொல்லுங்கள். சரீர நன்மைகளைப் பெற்ற சங்கீதக்காரனுக்கே அது அவசியமானால், சரீர

நன்மைகளையும், ஆவிக்குரிய நன்மைகளையும் ஒருங்கே பெற்ற நமக்கு அது எவ்வளவு அவசியம் என்று தயை கூர்ந்து சிந்தித்துப்பாருங்கள்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, ஒருவேளை, உங்களில் யாராவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிப்பின் பாத்திரம் எடுக்காதவர்களாக இருந்தால், உடனடியாக நீங்கள் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். "**இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் என்றே**, தேவன் பவுலடியாரைக் கொண்டு சொல்லியுள்ளார்" (II கொரி. 6:2). ஆகவே, நாம் காலம் தாழ்த்தக்கூடாது அப்படித் தாழ்த்துவது தேவ ஆலோசனைக்கு விரோதமானது.

ஒருவேளை, இரட்சிப்பின் பாத்திரத்தை நான் ஏற்கனவே எடுத்துவிட்டேன் என்று நீங்கள் சொல்கிறவர்களாக இருந்தால், உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரம், இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படி சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நம்முடைய இறுதி நியாயந்தீர்ப்பு வசனத்தினடிப்படையில் தான் இருக்கப்போகிறது. இயேசு ஆண்டவர் "....நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று தான் கூறியுள்ளார். ஆகையால், நம்முடைய இரட்சிப்பு (யோவா. 12:48) விசுவாசித்துப் பெற்றதாக (மாற். 16:16) பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பிப் பெற்றதாக (அப். 2:38), இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டுப் பெற்றதாக (அப். 8:37), பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கிப் பெற்றதாக (அப். 22:16) இருக்க வேண்டும். இதற்கு மாறான எந்தவொரு உபதேசமும், எப்படிப்பட்ட அனுபவமும் புதிய ஏற்பாட்டு உபதேசப்படியான இரட்சிப்பாக இருக்கமுடியாது.

அன்பானவர்களே, தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளுக்குப் பதிலாக ஒன்றைச் செலுத்துவதற்கு இரட்சிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறெதுவுமில்லை. ஆகையால், இன்றே இந்த இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களை மன்றாடிக் கேட்கிறேன். இரட்சிப்படைந்து, கர்த்தரால், அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு, (அப். 2:47) நித்திய வாழ்விற்க்கான உத்திரவாதம் பெறுங்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

EZS. ராஜநாயகம்

**ஏலகிரி வேதாகம முகாமிற்கு உங்கள் ஒவ்வொருவரையும் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். ஜெபத்தோடு வாருங்கள்.**

**- ஆசிரியர்.**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# ஒன்பதாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை தியானம் நேயர்கள் &
## திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 1,2,3 - 2006 (திங், செவ், புதன்)

### சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **80 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**


**கிறிஸ்துவின் சபை**

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382


குறிப்பு : சுமார் **400** பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# ஆதியிலிருந்தே இருக்கும் கிறிஸ்து

வேதத்தில் புதிய ஏற்பாட்டு பக்கங்களை நாம் திருப்பி வாசிக்கையில், அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் ஜனங்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். அதாவது, கிறிஸ்து யார் என்றும், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், சுவிசேஷத்தின் கட்டளை, அவரின் மற்ற போதனைகளையும் பிரசங்கித்தார்கள்.

ஒரு சமயம், கிறிஸ்து அவரை சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்து இப்படியாகக் கூறினார், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்தேயு. 11:28-30). நாம் கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்க வேண்டுமென்றால், அவரைப் பற்றி அறிய வேண்டும், அவரை அறிய வேண்டுமென்றால், அவர் சொன்னபடி செய்ய வேண்டும், அதாவது, அவரைப்பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படி நாம் கிறிஸ்துவைப் பற்றி கற்றுக்கொள்ள முடியும்? அது எளிதானது, வேதத்தை தியானிப்பதன் மூலமாக கற்றுக் கொள்ளலாம். கிறிஸ்து சொன்னார், "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச்சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே என்றார்" (யோவான் 5:39).

இம்மாதம் நாம் கிறிஸ்துவானவர் ஆதிமுதல் இருக்கிறார் என்பதைப் பற்றி படிக்கப்போகிறோம். அதாவது, அவர் மனிதனாக பிறப்பதற்கு முன்னமேயிருந்தார் என்பதைக் குறித்துப்படிக்கப்போகிறோம். கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்னிருந்தேயிருக்கிறார். சரியாக சொன்னால், அவர் எப்பொழுதுமே இருந்திருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 1:8ல் அவர் சொல்லும்போது, "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்" (வெளி. 1:8).

கிரேக்க மொழியில் முதல் மற்றும் கடைசி எழுத்துக்கள்அல்பா மற்றும் ஓமெகா எனப்படும். அதாவது, ஆரம்பம் மற்றும் முடிவு என்பதுதான் அதன்

பொருள். வெளி. 21:6 மற்றும் 22:13 ஆகிய வசனங்களில் இக்கருத்து மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. வெளி. 22:13ல் கூடுதலாக முந்தினவரும் பிந்தினவரும் என்று சொல்லப்படுகின்றது. மீண்டுமாக வெளி 3:14ல் அவர் தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியாக இருக்கிறார் அல்லது அவர் மூலமாக சகலமும் உண்டாயிற்றென்று சொல்லுகிறது. இவ்வசனங்களெல்லாம் நமக்கு சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்து ஆதியில் இருந்தே இருக்கிறாரென்றும், அவருக்கு ஆரம்பமும் முடிவும் இல்லையென்றும் நித்திய தன்மையுடையவர் என்றும் சொல்லுகிறது.

ஆதி 1:1-ல் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று வாசிக்கும் போது முதன்முதலில் கிறிஸ்துவைப் பற்றி நாம் கற்றுக்கொள்கிறோம். தமிழிலில் தேவன் என்று இருந்தாலும், அதற்குரிய எபிரேய வார்த்தை ஏலோகிம் எனப்படும் அவ்வார்த்தைக்கு, தேவத்துவம் என்று பொருளாகும் அதாவது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரையும் குறிக்கும். எபேசி 4:4-6-ல் பவுல் ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே தேவன் என்னும் பவுலின் கருத்தோடு ஒத்துப்போகிறதாக இருக்கிறது. ஆதியாகமத்தில் நாம் பார்க்கும்போது கிறிஸ்து உலகத்தின் ஆரம்பத்திற்கு முன்னிருந்தே இருக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, காலம், சிருஷ்டிப்பு, மிருகம், மனிதன் ஆகியவை உருவாவதற்கு முன்னமே அவர் இருக்கிறார் என்பது இதன் பொருள் ஆகும். சிருஷ்டிப்பில் அவருக்கும் பங்கு இருக்கிறது. ஆதி. 1:26,27 வசனத்தில், "பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் என வாசிக்கிறோம். இங்கே தேவன் பன்மையில் பேசுவதையும் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதற்கு **நமது சாயல், நமது ரூபம்** என்றும் பேசியிருப்பதையும் காண்கிறோம். இவ்வசனங்களிலும் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், தேவ ஆவியானவர் இருப்பதைக் காண்கிறோம். கிறிஸ்துவைப் பற்றி பவுல் கூறும் போது, "ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" என்கிறார் (கொலோ 1:16,17).

எபேசுவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலக தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திராகும்படி முன் குறித்திருக்கிறார் என்று புகழ்கிறார் (எபேசி. 1:3-6) இதற்கு பிதாவாகிய தேவனும் குமாரனாகிய கிறிஸ்துவும், மனிதனின் இரட்சிப்பின் திட்டத்தையும் சபையையும் மற்றவைகளையும் உலக தோற்றத்திற்கு முன்னிருந்தே திட்டமிட்டு இருக்கிறார்கள். இப்படி அவர் செய்வதாலே நீதிமானை இரட்சிக்கவும், துன்மார்க்கனை ஆக்கினைக்கு தீர்க்கவும் அவர் முன் குறித்தார். ஆகையால், இவ்வுலகத்திலும் இனிவரும் உலகத்திலும் நாம் யாருடன் இருக்கிறோம் என்று நாம் தான் தீர்மானிக்க வேண்டும். நம்மெல்லாரையும், அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பது தேவனுக்கு பிரியமானதாயிருக்கிறது. ஆனால், நமது விருப்பத்திற்கு மாறாக, அவர் நம்மை ஒரு போதும் கட்டுப்படுத்தமாட்டார்.

யோவான் நற்செய்தி நூலில் கிறிஸ்துவைப் பற்றி வாசிக்கும்போது, "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதென்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை'' என்று வாசிக்கிறோம் (யோவா 1:1-5) 10-ம் வசனத்திலே உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்றென்று வாசிக்கிறோம். 14-ம் வசனத்திலே வாசிக்கும்போது "அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது'' என்று வாசிக்கிறோம். இந்த வசனங்களில் நாம் அநேகர் உண்மைகளை கவனிக்க வேண்டும். முதலாவது, வார்த்தை ஒளி இவைகளை எழுத்தாளர் கிறிஸ்து என்று கூறுகிறார். இரண்டாவதாக, கிறிஸ்து தேவனோடு ஆதியிலிருந்து இருக்கிறார். சகலமும் அவரால் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவரையல்லாமல் உண்டாகவில்லை எனக்கூறுகிறார், மூன்றாவதாக, தேவன் கிறிஸ்துவை தனக்காக பேசும்படியும், இருள்நிறைந்த இவ்வுலகத்திற்கு ஒளியை கொடுக்கும்படியும் அனுப்பினார் எனவும் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்து தேவனோடு இருந்தார் என்பதையும், அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதையும் குறிக்கும் அநேக வேத வாக்கியங்கள் புதிய ஏற்பாட்டில் இருக்கிறது. உதாரணமாக, "தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோ. 1:18). யூதர்கள் தங்கள் பிதாக்களுக்கு வானத்திலிருந்து மன்னா அருளப்பட்டதை இயேசுவிடம் சொன்னபோது, "இயேசு அவர்களை நோக்கி வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவே வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்கு கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனை கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ஆண்டவரே இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி; ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான், நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" (யோ. 6:32-38) என்றார். மீண்டுமாக யூதர்கள் ஆபிரகாம் தங்கள் பிதா என்று சொன்னார்கள். இயேசு ஒருமுறை அவர்களைப்பார்த்து, "அதற்கு இயேசு; ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்" (யோ. 8:58) இவர்கள் ஆபிரகாம் வரை தங்களுக்கிருந்த உறவை சொல்ல முடிந்தது, இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று நினைத்துக் கொண்டார்கள். ஆனால், கிறிஸ்து அவர்களைப் பார்த்து நான் ஆபிரகாமுக்கு முன்னமே தான் இருப்பதாக சொன்னார். ஆக, இவர்கள் ஞானிகளாக இருந்தால் ஆபிரகாமுக்கு முன்னமே இருந்த இயேசுவின் பேச்சைக் கேட்டிருக்கவேண்டும், ஆனால் அவர்களோ அவரை கல்லெறியும்படி நாடினார்கள்.

இன்னும் நாம் பல காரியங்களைச் சொல்லிக்கொண்ட போகலாம் ஆனால், மேற்கண்ட வசனங்களின் கருத்தென்ன? தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மனிதகுலத்தின் ரட்சகராக இருக்கிற அவர் எப்பொழுதும் இருந்திருக்கிறார் என்பதே அக்கருத்து. அவர் நித்தியமானவர், அவர் தெய்வீகம் நிறைந்தவர், இவ்வுலகத்தின் நம்பிக்கையும், இரட்சகருமாயிருக்கிறவர் அவர் ஆதியிலிருந்து பிதாவோடு கூட இருக்கிறார். உண்டானதெல்லாம் அவர் மூலமாய் உண்டாயிற்று

ஆதி 3:15-ல் ஏதேன் தோட்டத்தில் மனிதகுலம் பாவத்தில் வீழ்ந்தபோது அவனை இரட்சிக்கும்படியாகவும், அவனுக்கு நித்திய ஜீவனின் நம்பிக்கையை தரும்படியாகவும் தனது குமாரனை இவ்வுலகத்தில் அனுப்புவேன் என்று வாக்கு கொடுத்தார். அந்த வாக்குக்குப்பின்னும் கிறிஸ்து தேவனோடு நூற்றுக்கணக்காண வருடம் இருந்தார், பழைய ஏற்பாட்டில் அவர் மனிதனோடு அநேகம் முறை உரையாடியிருக்கிறார். அவரைப் பற்றிய வாக்குத்தத்தங்கள் மாத்திரமல்ல. அவரைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் பழைய ஏற்பாட்டில் உள்ளது. கடைசியாக, காலம் நிறைவேறினது பிதா தனது ஆதீனத்தில் வைத்திருந்த ஏற்ற காலத்தில் தனது ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார். அவர் கன்னியினிடத்தில் பிறந்தார். நன்மை செய்கிறவராக இவ்வுலகில் சுற்றித் திரிந்தார். தான் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்க அநேக அற்புதங்களை செய்தார். அதன்பின்பாக இவ்வுலகத்தின் பாவத்தை போக்கும் பலியாக சிலுவையில் தன்னையே ஒப்புக் கொடுத்தார்.

அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக கொஞ்சகாலம் மனிதர்களுக்கு தன்னை திருஷ்டாந்தப்படுத்தினார் அதன்பின்பு பரலோகத்திலிருக்கும் தன் பிதாவினிடத்தில் திரும்பினார். அங்கே, அவருடைய வலது பாரிசத்தில் ராஜாதி ராஜாவாகவும் கர்த்ததாதி கர்த்தராகவும் இந்நாள்வரைக்கும் வீற்றிருக்கிறார். இப்பொழுது அவர் மனித குலத்தின் இரட்சகராயிருக்கிறார். ஆனால், ஒருநாளில் மனிதகுலத்தின் நியாயாதிபதியாக திரும்ப வருவார் ஆமென்!.

**J.C. CHOATE** **J.C. சோட்**

### *உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன!*

இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. (ஆதி. 2:1). ஒரு செயல் எதிர்காலத்தில் தொடாரதபடி முடிந்து போய்விட்டது என்று சொல்கிறார். சிருஷ்டிப்பு முற்றும் முடிந்துவிட்டது என்று சொல்கிறார். இதைத்தான் தெர்மோ டைனமிக்ஸ்-ன் முதல் விதி சொல்கிறது. இந்த விதி ஒரு பொருளை அல்லது சக்தியை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது என்று சொல்கிறது. இந்த அடிப்படையை வைத்துத்தான் Sir Fred Hoyles என்பவரது Steady State or Continuous Creation என்பது பொய்யாக்கப் பட்டுள்ளது. இந்த இயற்பியல் ரீதியான உண்மை மோசேக்கு எப்படி தெரியும்? தேவன் தான் அதை எழுதும்படியாக ஏவினார்.

பெண்கள் பகுதி

# உள்ளதையெல்லாம் கொடுத்தவள்

அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு கூட சேர்ந்து வேத வசனங்களை கற்றுக் கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம். வேதாகமத்தில் காணப்படும் பெண்களின் வாழ்க்கை மூலமாக, எல்லாக் காலத்திலும் வாழும் பெண்கள் அறிந்து கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. மாற்கு 12 ம் அதிகாரம் 41 முதல் 44 முடிய உள்ள வசனப்பகுதியில், நினைவு கூரப்படவேண்டிய ஒரு ஸ்திரீ இருக்கிறாள். நாம் தேவனுக்கு செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றை அவள் வாழ்க்கை நமக்கு கற்றுக் கொடுக்கிறது. அதென்னவென்றால் ஒரு கிறிஸ்தவனுக்கும், பணத்திற்கும் உள்ள உறவு பற்றியது.

***தேவனும், மனிதனும், பொருளாதார உடமைகளும் :***

அருமையானவர்களே, எப்போதுமே தேவனுக்கும், மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் சம்பந்தம் இருந்து கொண்டேயிருக்கிறது. ஆதியிலே முதல் குடும்பம் தொடங்கின காலத்திலிருந்து, மனிதன் தனக்குள்ளதை பலியாக செலுத்தும்படி தேவன் கட்டளை கொடுத்துள்ளார். எனவே அநேகர் நினைப்பது போலல்லாது, இந்த விஷயத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன. ஒரு கிறிஸ்தவனும், பணமும் சமபந்தப்பட்ட காரியம் தாமிடம் அன்றாடம் நடைமுறையில் இருப்பதாலும், ஒவ்வொரு தனி நபரையும் சந்தித்து கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வியாக இருக்கும் இப்பணத்தைப் பற்றிய பாடம் மற்ற பாடங்களை படிப்பதை விட மிகவும் பிரயோஜனமாயிருக்கும். ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் மிட்டாய் வாங்க காசு வாங்கும் சமயத்திலிருந்து தன் வாழ்நாள் பரியந்தமும் பணம் அவன் கையாளும் ஒன்றாக மாறிவிடுகிறது. மளிகை, துணிமணிகள் மற்ற தேவைகள் வாங்கப் போகும்போது **அங்கே முடிவெடுத்தல்** அவசியமாயிருக்கிறது. கர்த்தருடைய நாளில் ஆராதனையிலும், பணத்தைப் பற்றி முடிவெடுத்தல் கட்டாயமான ஒன்றாகும். பொதுவாக பணம் செலவழிப்பதில் பெண்கள் பங்கு அதிகமாக இருக்கிறது. இது உண்மையாதலால், கர்த்தருக்கு கொடுக்கும் அளவு பற்றி முடிவெடுப்பதில் பெண்களின் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது மிக அவசியம்.

**கொடுத்தல் காரியத்தில் கிறிஸ்து மிகவும் அக்கறையுள்ளவராயிருந்தார் :**

இயேசு கிறிஸ்து, கொடுத்தல் விஷயத்தில் மிகவும் அக்கறையுள்ளவராயிருந்ததினால் காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏழையான ஒரு விதவையும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி, எப்போதும் ஆயத்தமாயிருக்கும் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, உடனே தம் சீஷர்களை தம்மிடம் அழைத்து, **காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்கும் சொல்கிறேன் என்றார்** (மாற்கு 12:41-44).

இங்கே இரண்டு வித்தியாசமான செல்வங்கள் பற்றி பேசப்படுகிறது. இந்த சம்பவத்தில், இந்த ஏழை விதவை உலகப் பொருளில் ஏழையாகவும், தேவ நீதியில் பணக்காரியாயும் இருந்தாள். அவளுடைய பணப்பை மெலிந்ததாகவும், ஆத்துமாவோ கொழுத்தும் காணப்பட்டது. ஒருவன் சரீரப்பிரகாரமான செல்வம் பெற்றிருப்பது தவறல்ல. ஆனால், தேவனோடும் செல்வந்தனாக இருக்க வேண்டும். அது அவசியம். முற்பிதாவாகிய ஆபிரகாம், யோசேப்பு, பக்தன் யோபு போன்றவர்கள் செல்வச் சீமான்களாக இருந்து கொண்டு நீதிமான்களாயும் இருந்தார்கள். ஒருவன் எவ்வளவு ஐசுவரியமுள்ளவனாயிருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்பதை விளக்கும் வகையில் ஐசுவரியவான் ஒருவனை **மதிகேடனே!** என்று சொல்லிவிட்டு (லூக்கா. 12:15-20). **தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்** (வ. 21) என்று நாம் பயன்பெறும்படி இவ்வாறு சொல்லியிருக்கிறார். **தேவனுக்கு பயப்படுகிற ஒருவன் செல்வம் இல்லாமல் வாழமுடியும், ஆனால், செல்வந்தன் ஒருவன் தேவன் இல்லாமல் வாழமுடியாது. ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு** (நீதி. 8:18). தேவன் கொடுக்கும் ஐசுவரியம், நீதி இவைகள் நிலைத்து நிற்கக்கூடியது. எவ்வளவு அழகான கருத்தாக இது இருக்கிறதென்று பாருங்கள். இந்த ஏழை விதவையிடம் இரண்டு காசுகள்தான் இருந்தன, ஆனால், நிலையான ஐசுவரியத்தையும், நீதியையும் அவள் பெற்றிருந்தாள். மேலும், கிறிஸ்து இரண்டு வகையான செல்வத்தைப் பற்றி பேசுகிறார். **"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்..... பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்....."** (மத். 6:19,20). பணம் சம்பாதிப்பதும், அதை சேர்த்து வைப்பதும் தவறல்ல, ஏனென்றால், வேதாகமத்தில் வேறு இடங்களில் இந்த இரண்டையும் செய்யச்

சொல்லுகிறது. ஆனால், இந்த வசனப்பகுதி ஆவிக்குரிய செல்வம் முதலிடம் பெற வேண்டும். உலக செல்வம் அதற்கு பின்னாகத்தான் செல்லவேண்டும் எனக்கூறுகிறது.

***<u>கொடுப்பதை ஏன் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்?</u>***

தேவன் நமக்கு கொடுத்திருக்கும் எந்தக் கட்டளையும் பாரமானவைகள் அல்ல. காரணமற்றவைகளாயும் அல்ல. கொடுக்கும் விஷயத்தில் ஏன் தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார் என்று நாம் புரிந்து கொண்டால் கட்டாயமாக நாம் தாராளமாகவும், மனமுவந்தும் கொடுப்போம். கட்டளை என்றால் என்ன? "**கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்று**". நம்முடைய நன்மைக்காக தேவன் கொடுக்கச் சொல்கிறார். அது எவ்வாறு நமக்கு நன்மையை கொண்டு வரும்?

**முதலாவது**, "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத். 6:21) நம் இருதயம் ஆவிக்குரிய காரியங்களை தைரியமாக கொண்டிருக்க வேண்டும். அது நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல உதவியாய் இருக்கும். எந்தக் காரியத்திற்காக அதிகம் செலவழிக்கிறோமோ அந்தக் காரியத்தில் அதிக நாட்டமும், அதற்காக வேலை செய்யவும் நம்மை தூண்டும். நம் பொக்கிஷத்தின் இடமானது நம் இருதயத்தை பிரதிபலிக்கும். கர்த்தருக்கு கொடுக்க தவறும்போது அந்த இருதயம் சாவுக்கேதுவான வியாதியுடையதாக இருக்கிறது. ஆவிக்குரிய இருதய பிரச்சனை. நம் ஆத்துமாவை அழித்துவிடாது. இது ஒரு நீங்கா வியாதி. இருதயத்தின் தொல்லைகள் நீங்கி ஆவிக்குரிய காரியங்களில் நாட்டம் செலுத்தும்போது, பெலமான இருதயம் பெறப்பட்டு கர்த்தருக்காக தாராளமாய் கொடுக்கலாம்.

**இரண்டாவதாக**, தேவனைப் போலவும், கிறிஸ்துவைப்போலவும் இருப்பதற்காக நாம் கொடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவத்தின் துவக்கமே கொடுத்தல் தான். தாராளமாய் விரிக்கும் கரங்களும், தான தர்மங்களை செய்யும் கைகளுமே (எபி. 13:16) தேவன் மிகச் சிறந்த முதன்மையான தன் ஒரே குமாரனை கொடுத்தார். கிறிஸ்து தன் விலையேறப்பெற்ற உடமைகளான இரத்தத்தையும், உயிரையும் கொடுத்தார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மனமுவந்தும், தாராளமாயும் கொடுத்தார்கள். சிலர் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் கொடுக்கிறதின் அர்த்தமே இன்னதென்று தெரியாமல் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம். மனப்பூர்வமாக கொடுக்கும் பழக்கத்தை பெற்றுக் கொள்ளும் போதுதான் நாம் கிறிஸ்துவைப் போல வாழ்ந்து கிறிஸ்துவத்தை பரப்ப முடியும்.

**மூன்றாவதாக,** கொடுத்தல் மூலமாக நாம் தேவனை கிட்டிச் சேர முடியும் (1 கொரி. 9:14). அதோடு அவரில் அதிக அன்பு செலுத்த முடியும். நாம் எந்த ஒரு காரியத்திற்காக தியாகம் செய்கிறோமோ, அதில் அதிக அன்பு செலுத்துவோம், இந்த தத்துவம் தான் பெற்றோர் பிள்ளைகளில் அன்பு காட்டுவதில் அடங்கியிருக்கிறது. பிள்ளைகள் பெற்றோரிடம் அன்பு கூறுவதற்கு இது பொருந்தாது. ஏனென்றால், பெற்றோர் தான் பிள்ளைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். அவர்கள் தான் பிள்ளைகளை உலகிற்குள் கொண்டு வருவதில் இருந்து, அவர்கள் சுகவீனத்தில் அதிக நேரத்தை செலவிடுதல், கஷ்டப்பட்டு உழைத்து அவர்கள் தேவைகளை சந்திப்பது, அவர்களுக்காக திட்டமிடுதல், நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்துதல் போன்றவைகளுக்காக தியாகம் செய்கிறார்கள். எப்படி இவ்வாறு செய்ய முடிகிறது? **அன்பு தியாகத்தை கொடுக்கிறது. தியாகம் அன்பைக் கொடுக்கிறது** (1யோ. 4:9,10). இவை இரண்டும் பிரிக்க முடியாதவைகள்.

இதின் மேன்மையை உணர்ந்ததின் காரணமாகத்தான் இயேசு காணிக்கை போடும் இடத்தில் உட்கார்ந்தார். தன்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் நன்மைக்காக இப்பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று இயேசு அறிந்திருந்தார்.

**நான்காவதாக,** சுவிசேஷம் பரவுவதற்காக நாம் கொடுக்க வேண்டும் (1கொரி. 9:14) பணம் இல்லாமல் உலகெங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடியாது. ஆத்தும ஆதாயத்தில் நமக்கு விசுவாசம் இருக்குமானால், கொடுக்கிற விஷயத்திலும் நமக்கு விசுவாசம் இருக்க வேண்டும்.

**ஐந்தாவதாக,** தேவையில் இருப்பவர்களை தாங்குவதற்காக நாம் கொடுக்க வேண்டும் (II கொரி. 8:1-5) தேவையில் இருப்பவர்களை கண்டு கொள்ளாமல் இருப்போமானால் நாம் கிறிஸ்துவர்களாயிருக்க முடியாது. சபையானது இதற்கு பொறுப்பாக இருப்பதினால், இதை நிறைவேற்ற பணம் தேவைப்படுகிறது.

அருமையானவர்களே! மேற்கண்ட காரியங்களில், இந்த ஏழை விதவையின் பங்கு என்ன என்பதை அடுத்த மாதத்தில் பார்ப்போம்.

***- ரேச்சல் ராஜநாயகம்***

**தொடரும்..**

வாலிபர் பகுதி

# இன்னாரென்றறிவேன்!

ஞாலத்தை ஞானமாக உருவாக்கி, ஆதிமனிதனாகிய ஆதாமை வனைந்தெடுத்து, நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதியபின் அவன் ஜீவாத்துமாவானான். தேவனால் படைக்கப்பட்ட அவனுக்குப்பின் இயற்கைச் சட்டம் அமுலுக்கு வந்தது, அதன் பின் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் பத்து திங்கள் தன் தாயின் கருவறையில் உருவாகி, பச்சிளங்குழந்தையாக பாரினில் பிறந்து, உலகில் தன்னை கொண்டு வந்த பெற்றார் இன்னாரென்றுணர்ந் தறிந்து, பின்பு கல்வி கண் திறக்கும் ஆசானின் மூலம் ஓரளவுக்கு இப்புவிதன்னைப் புரிந்து, அனுபவங்களினால் மக்களின் மனது இன்னதென்று அளந்து, நிலையற்ற இவ்வாழ்க்கை பாதையில் மனிதன் நடைபழகுகிறான் என்றால் அது மிகையன்று. அப்படி நடைபழகும் போது அவன் பலரைப் பற்றி இவர்கள் இன்னார்கள் என்று உணர்ந்து கொள்கிறான் என்பதை என்னோடு நீங்களும் ஒத்துக்கொள்வீர்களென நம்புகிறேன்.

வையகத்து மாந்தர் மனது ஆழமான கிணறு என்றால் அவனையும், அவனியையும் படைத்த பரமனின் மனது, தனக்குவமையில்லாதது. மனிதனின் மனதையும், அவன் இன்னானென்று அறிந்து கொள்ளும் நாம், மன்னவரைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசிய மென்றெண்ணி, அப்படி அறிந்து கொண்ட ஒருவர் என்ன சொல்கிறார் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இதோ அவரின் வார்த்தைகள், "நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்...." (II தீமோத். 1:12) இப்படி பரமனைப்பற்றிய பற்றை முழுமையாக வெளிப்படுத்தியவர் நமது அப்போஸ்தலன் பவுல் தான். அவரால் எப்படி இவ்வளவு ஆழமான விசுவாச முழுக்கத்தை வெளிப்படுத்த முடிந்தது என்பதை கற்றுக்கொள்ள முயற்சிப்போம் வாருங்கள்.

## சுவிசேஷத்தினால் அறிந்து கொண்டார்

ஆதித்திருச்சபையை அவனியிலிருந்தழிக்க வேண்டுமென்று காரியங்களை தீவிரமாக நடப்பித்த பவுலை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமஸ்குவின் சாலையில் சந்தித்தபின், அவன் வாழ்வில் செய்த தவறுகளை சிந்தித்து, அதற்காக மனம் வருந்தி, பின் திருந்தி தியாக சீலரான இயேசு கிறிஸ்துவைப் பற்றி பார் முழுவதும் பிரசங்கித்த பவுல், விசுவாசத்தில் தான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு இவ்வசனத்தை எழுதும் போது, "அதினிமித்தம்" என்று ஆரம்பிக்கிறார்.

எனக்கன்பான வாலிபனே! பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினிமித்தம் பாடுகளை அடைந்திருக்கிறார். ஏன் அப்படி, அவர் அந்த சுவிசேஷத்திற்காக பாடுபட்டார். இதே அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார், நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்". என்று தேவ் அன்பின் ஆழத்தை அழகாக வடித்துக்கொடுத்திருக்கிறார் (ரோமர். 5:6-8)

சிந்தனைக்கு இனிமையான இளைஞனே! பாவிகளான நமக்காக இயேசு மரித்தார். நாம் நீதிமான்கள், அல்லது நல்லவர்கள் என்பதற்காக அல்ல, நாம் நம்மையே இரட்சிக்க பெலனற்றவர்களாகவும் அக்கிரமக் காரர்களாகவும் இருக்கையில் நமது அருமை இரட்சகர் நமக்காக மரித்தார், அதுவும் அவருடைய மரணம் எப்படிப்பட்டது என்று நினைக்கையில், அவர் நமக்காக பட்ட பாடுகளை நினைக்கையில் அவர் இன்னாரென்று நம்மால் அறிந்து கொள்ள முடிகிறதல்லவா! பவுலும் அதினால்தான், "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நாமெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" என்று வினவுகிறார் (ரோமர். 8:32) பவுல் தேவனையும் அவரது குமாரனையும் பற்றி எத்துணை அறிந்திருக்கிறார் என்று பாருங்கள்.

நாம் பாவிகளாயிருந்த போது மரித்த இயேசு, தன் சொந்த குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்த தேவன். இதற்கு மேல் அவர்கள் யார் என்பதற்கு வேறு என்ன சாட்சி அல்லது ஆதாரம் வேண்டும். அதுவும் பவுல் தன்னை குறித்து சொல்லும் போது, "தான் பாவிகளிலும் பிரதான பாவி" (1 தீமோத். 1:15) என்று தன் முன் நிலையைக் குறித்தும், தான் எப்படி இரக்கம் பெற்றேன் என்றும் எழுதுகிறார். அத்துணை பாவியாகிய தன்னை தேவன் மன்னித்திருக்கிறாரே அவர் எத்துணை அன்பும், இரக்கமும், சாந்தமும், நீடிய பொறுமையுமுள்ளவர் என்று, அவர் இன்னாரென்றறிந்திருந்தார் பவுல்.

## தனது பாடுகள் மூலம் அறிந்தார்

தன் மீது இத்தனை அன்பு கூர்ந்த தேவனுடைய, அவருடைய குமாரனுடைய சுவிசேஷத்திற்காக பவுல் பாடுகள் பலபட்டார். தேவனுடைய சுவிசேஷத்தை உண்மையாக பிரசங்கிக்க நினைக்கும் ஒவ்வொருவரும் பாடுகளை எதிர்பார்க்க வேண்டுமென்று 11தீமோத் 1:8ல் நாம் காணலாம். ஏனென்றால் நாம் சத்தியத்தை உத்தமாக போதிக்கும் போது, சிலர் அதை

விரும்பப்போவதில்லை என்பதை நாம் 2 தீமோத் 4:3ல் அறிந்து கொள்ளலாம். அவர்கள் விரும்பாததோடு நிறுத்திக்கொள்ளுவதில்லை நமக்கு அவர்கள் தீமை செய்யவும் துணிவார்கள் (2 தீமோத். 1:8;4:14)

பவுல், பாடுகள் நிறைந்த இந்த நிலையிலும் "தன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்" (1கொரி. 1:9) என்று அறிந்திருந்தார். நான் விசுவாசித்தவர் இன்னார் என்று அறிவேன் என்று பவுல் சொல்லும் அளவுக்கு அவர் தன் வாழ்வில் அதை அனுபவித்திருந்தார். கிறிஸ்துவின் நாமத்திற்காக அவர் உத்தரவு சொல்லும் போது, அவர் சொல்லுவதைக் கேளுங்கள், "நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்...... கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று என்னாலே பிரசங்கம் நிறைவேற்றுகிற தற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னை பெலப்படுத்தினார்." (2 தீமோத் 4:16,17)

பாடுகள் தன்னை சுற்றி கடும் வலை பின்னிக்கொண்டது, தனக்கு துணையாக நிற்பார்கள் என்று எண்ணியவர்கள் எல்லாம் விட்டோடிப் போனார்கள். அப்பொழுதுதான் வாழ்வில் ஒரு மனிதன் இறைவன் மட்டும் போதும் என்றுணர்கிறான். அது போலவே பவுலுக்கு கர்த்தர் துணையாக நின்றார். அவனை எல்லாத் தீமைக்கும் நீங்களாக்கி விடுவித்தார். பவுல், அவ்வசனத்தில் மேலும் சொல்லுகையில், "சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" (11தீமோத். 4:17) என்கிறார். சிங்கத்தின் வாயிலிருக்கிறவன் சாவுக்கு எத்தனை அருகாமையிலிருக்கிறான் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அப்படிப்பட்ட நிலையிலிருந்தும் தேவன் தன்னை காப்பாற்றியிருக்கிறார் என்று பவுல் அனுபவித்திருந்தார்.

பவுல், தன்னை காப்பாற்றியதை மட்டும் சொல்லிவிட்டுவிடாமல் கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென் என்று தேவனையும், அவருடைய குமாரனையும் இன்னார்கள் என்று அறிந்து, தனது நம்பிக்கையையும் துதியையும் வெளிப்படுத்துகிறார் பவுல், (2தீமோத். 4:18) நாமும் கூட தேவன் அன்புள்ளவர் என்பதை அவருடைய சுவிசேஷத்தின் மூலம் அறிந்து நமது வாழ்க்கையில் வரும் துன்பங்களில் அவர் உதவி செய்வார் என்று உணர்வோம். பவுலைப் போலவே தேவன் இன்னாரென்று நாமும் அறிந்து கொள்ளுவோம். ஆமென்!

*ஜே. பிக்கின்ஸ்*

சிறுவர் பகுதி

# ஆமோஸ்

நமது ஆண்டவருக்கும் எனக்கும் மிகவும் பிரியமான சிறுதம்பி, தங்கைகளே, இக்கட்டுரை வாயிலாக உங்களை வாழ்த்துவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகிறேன். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாக தமது ஜனமாகிய இஸ்ரவேலர்களோடு பேசினார். அப்படி அவர் வல்லமையாக பயன்படுத்திய ஆமோஸ் மூலம் சில பாடங்களை கற்றுக்கொள்வோமா?

இஸ்ரவேலை தேவனிடத்தில் திரும்ப வழிநடத்த முயற்சித்த மேய்ப்பன், மேய்ப்பர்கள் வேதாகமத்தில் அநேகந்தரம் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு முக்கியமான மேய்ப்பர்களுள் ஒருவர் அதிகமாக அறியப்படவில்லை. அவருடைய பெயர் ஆமோஸ். பழைய ஏற்பாட்டில் அவருடைய பெயர் ஆமோஸ். பழைய ஏற்பாட்டில் அவருடைய பெயரை தரித்திருக்கிறப் புஸ்தகத்திலிருந்து ஆமோஸ் என்பவரை நாம் அறிவோம். இந்த ஆமோஸ் இஸ்ரவேலின் தெற்குப் பகுதியான யூதாவின் **தெக்கோவா** ஊரைச் சார்ந்தவர். இவர் தாழ்மையுள்ள கடின உழைப்புள்ள ஒரு மனுஷன் இவர் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்ததுமின்றி அத்திமரங்களையும் பராமரித்து வந்தார். ஆமோஸ் ஒரு சாதாரண கிராமத்தில் வாழ்ந்து கொண்டு ஒரு சாதாரண வேலையை செய்து கொண்டிருந்தார். அவர் அதிகமாக புகழ்பெற்றவரும் அல்ல, ஐசுவரியமுள்ளவருமல்ல, பலசாலியுமல்ல. ஆனால், தேவன் அவரை அசாதாரணக்காரியங்களை செய்யும்படித் தெரிந்தெடுத்தார். தேவன் அவரை வீட்டிலிருந்து அதிக தூரம் செல்லும்படி பணித்தார். அதுமாத்திரமல்ல இஸ்ரவேலின் வடபகுதிக்கும் போகச் சொல்லி இஸ்ரவேலர்கள் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள பிரசங்கம் செய்யும்படிப்பணித்தார்.

ஆமோஸ் ஒரு பிரசங்கியாருக்கான பயிற்சியையோ, அல்லது ஒரு தீர்க்கதரிசிக்கான பயிற்சியையோ எடுக்கவில்லை, ஆனால் தேவன் ஒரு வேலையை செய்யக் கொடுத்தபோது அதைச் செய்தார். தேவன் அவரை யெரொபெயாம் ராஜா விக்கிரகங்களை அதிகமாக ஏற்படுத்தின பெத்தேலுக்கு போகும்படிச் சொன்னார். யெரொபெயாமும், இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களும் மக்களை தேவனிடத்திலிருந்து தவறாக வழிநடத்தி மனிதர்களால்

செய்யப்பட்ட விக்கிரகங்களை வழிபடும் படியாகவும், அந்த விக்கிரகங் களின் பெயரில் பயங்கரமான வைகளை செய்யும் படியாகவும் மக்களை வழி நடத்தி னார்கள். இஸ்ரவேலர்கள் அவர்களுடைய தெய்வங் களுக்கு பலி செலுத்தினார்கள் அவை களுடைய கனத்திற்காக விருந்து படைத் தார்கள். தேவனுடைய பார்வையில் எது சரியானது என்பதை விட அவர்களுக்கு எது நன்றாகப்பட்டதோ அதை செய்தார்கள்.



இஸ்ரவேலர்கள் வசதியாக வாழ்வதிலும், செல்வம் சேர்ப்பதிலும் அதிக நாட்டமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் பேராசையுள்ளவர்களும், சுயநலவாதிகளுமாயிருந்தார்கள். எனவே, அவர்கள் அடிக்கடி ஏழைகளை அலட்சியப்படுத்தி அவர்களைத் தவறாக நடத்தினார்கள். சிறிது நிலத்தை வைத்திருந்தவர்கள் அதிக நிலத்தை வைத்துக் கொள்ள விரும்பி ஏழைகளிடமிருந்து அதை எடுத்துக்கொண்டார்கள். அருமையான வீடுகளை உடையவர்கள் இன்னும் பெரிய வீடுகளை விரும்பி யானைத் தந்ததாலான வீடுகளைக் கட்டினார்கள் (3:15) ஆனால், ஏழைகளுக்கோ இருப்பிடம் இல்லா திருந்தது. ஏழைகள் பட்டினியா யிருந்தபோது அதிக பணம் வைத்திருந்தவர்கள் அதிகமாக ஆகாரத்தை தங்கள் தேவையை விட அதிகமாக உண்டார்கள். இப்படி தேவன் இஸ்ரவேலர்களை வாழச் சொல்லவில்லை.

மேலும், ஆமோஸ் இஸ்ரவேலர்களை நீதியற்றவர்கள் என்று சொன்னார். ஏனென்றால், விக்கிரகங்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவைகள், மனிதர்கள் தங்களுக்கு எது சரி, எது தவறு என்று படுகிறதோ அதின்படி முடிவெடுக்கிறார்கள். விக்கிரகங்கள் மனிதர்கள் மற்றவர்களை தவறாக நடத்துவதை கண்டுகொள்ள வில்லை. ஆனால், தேவன் அதை வெறுக்கிறார். ஏனென்றால், தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார். அதேபோல், தன்னால் தெரிந்தெடுக் கப்பட்ட மக்களும் நீதியுள்ளவர் களாயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார், மேலும் ஒருவரை யொருவர் நீதியாக, நியாயமாக நடத்த வேண்டுமென்று எதிர்பார்க் கிறார். தேவன் இஸ்ரவேலர்களை அவர்கள் எப்படி நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறார்களோ

அப்படியே மற்றவர்களை அவர்கள் நடத்தவேண்டுமென்று விரும்புகிறார்.

ஆமோஸ் இஸ்ரவேலர்களைப் பார்த்து, நீங்கள் பிழைக்கும் படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார். நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுக வாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்; நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது என்று சொன்னார். (5:14,15,24). ஆமோஸ் இஸ்ரவேலருக்கு சுமார் 2700 வருடங்களுக்கு முன்பு பிரசங்கித் திருந்தாலும், தேவன் இன்றைக்கும் நாம் அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். மனுஷர் நமக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறோமோ, அவைகளை நாமும் அவர்களுக்குச் செய்ய வேண்டு மென்று தேவன் எதிர் பார்க்கிறார். மத்தேயு (7:12) மேலும் நாம் ஒருவருக்கொருவர் தயவாயும், நீதியாயும், சுய நலமற்றவர் களாயிருக்க வேண்டு மென்று தேவன் எதிர்பார்க்கிறார். (யாக்கோபு 2:1-9; எபேசியர் 4:32) தேவன் இஸ்ரவேலர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார், நாமும் அவருடைய வசனத்தின்படி நடவாவிட்டால் நம்மிடமும் அதையே விரும்புகிறார்.

தமிழில் : ***R.A.R. NAYAGAM***

## நாளும் நடப்பும்

- மூல்லைப் பெரியார் அணை நீர்மட்டத்தை உயர்த்த கேரள அரசு மறுப்பு, தமிழக அரசு உச்சநீதிமன்றம் செல்கிறது.
- தமிழக சட்டசபை தேர்தல் தேதி அறிவிப்பு, தேர்தல் களம் சூடு பிடித்தது.
- மகாராஷ்டிர மாநிலத்தில் மீண்டும் பறவைக் காய்ச்சல்.
- இந்தியாவுக்கு யூரேனியம் வழங்க ரஷ்யா முடிவு. அமெரிக்கா கடும் எதிர்ப்பு.
- மெல்போர்ன் நகரில் கோலாகலமாக காமன் வெல்த் போட்டிகள் தொடங்கியது.
- ஒருநாள் கிரிக்கெட் போட்டி 438 ரன் எடுத்து தென் ஆப்பிரிக்கா அணி உலக சாதனை
- இங்கிலாந்து உடனான டெஸ்ட் கிரிக்கெட் இரண்டாவது போட்டியில் இந்தியா வெற்றி.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 ஆம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் நகரில் சுமார் கி.பி 30ல் கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டது என்பதைப் பார்த்தோம். பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் அப்போஸ்தலர்களிடத்தில் வந்தபோது அவர்களை பெலப்படுத்திய போது கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டது. நாம் ஏற்கனவே சேர்ந்து படித்த வசனங்களில் இயேசு எவைகள் சம்பவிக்கும் என்ற சொன்னாரோ அவைகள் சம்பவித்தது.

இதற்கு முன்பு தேவன் தம்முடைய தீர்க்க தரிசியாகிய ஏசாயா மூலமாக தம்முடைய வீடு அல்லது சபையை ஸ்தாபிப்பதாக தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். இந்த ஆச்சரியமான தீர்க்கதரிசனம் ஏசாயா 2:2-4 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஏசாயா மூலமாக தேவன் வெளிப்படுத்தின அந்த தீர்க்தரிசனம் 700 வருடங்களுக்குப்பின் நிறைவேறின காரியம் மிகவும் சுவாரஸ்யமானதும் விசுவாசத்தைக்கூட்டி எழுப்பக்கூடியதாகவும் இருக்கிறது அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கமுடியும். ஏசாயா 2 ஆம் அதிகாரத்தில் சபை தீர்க்கதரிசனமாக உரைக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அப். 2 ஆம் அதிகாரத்தில் தேவன் தீர்க்கதரிசனமாக சொன்னது சபை ஸ்தாபிக்கிறதாக நிறைவேறுவதை நாம் காண்கிறோம். அதைக்கட்டுவதற்காக ஒரு விளக்க அட்டவணையைத் தயாரித்துள்ளோம். தயவு செய்து சிறிது நேரத்தை இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கிற வசனங்களை படிப்பதற்கு செலவு செய்யுங்கள். ஏசாயா 2:2-4 (சபை தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது) க்கும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 (சபை ஸ்தாபிக்கப்பட்டது) க்கும் உள்ள ஒற்றுமைகள்.

### நற்கனிகள்

1. **மனந்திரும்புதலுக்கேற்ற கனி. மத். 3:8**
2. **ஆவியின் கனி. கலா 5:22**
3. **நீதியின் கனி. எபி. 13:15**
4. **உதடுகளின் கனி. எபி. 13:15**
5. **நற்கிரியைகளாகிய கனி. கொலோ. 1:10**

| ஏசாயா 2 | அப் 2 |
|---|---|
| 2 : 2 - கடைசி நாட்களில் (காலம்)<br>2 : 2 - கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும்<br>(என்ன) | 2:17 - கடைசி நாட்களில் 1 தீமோ. 3:15 தேவனுடைய வீடு என்பது சபையாகும்.<br>அப். 1:12; 2:5 - அப்போஸ்தலர்கள் எருசலேமில் கூடினார்கள். |
| 2 : 2 பர்வதங்கள் கொடுமுடியில் (எங்கே) | அப். 15:2; சகரியா 8:3 எருச்லேம் பர்வதங்களின் கொடுமுடியில் இருக்கிறது. |
| 2:2 எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். | அப். 2:5 வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் இருந்தார்கள். |
| 2:3 திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்குப் போவோம் வாருங்கள் என்பார்கள். | அப். 2:6 திரளான ஜனங்கள் கூடி வந்தார்கள். |
| 2:3 அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். | அப். 2:14-39 பேதுரு தேவனால் ஏவப்பட்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். |
| 2:4 அவர்கள் தங்கள் பட்டயங்களை மண் வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் (சமாதானத்தின் அடையாளம்). | அப். 2- பேதுரு சமாதானத்தின் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார்.<br>சமாதானம்:<br>2 : 38 - பாவமன்னிப்பு பெற்றுக் கொள்ளுங்கள்.<br>2 : 40 - உங்களை இரட்சித்து<br>2 : 41 - வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். |

எபேசியர் 2:14-18யையும் பாருங்கள்

எப்படி ஒரு மனிதன் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் இப்படிப்பட்ட ஆச்சரியமான தீர்க்கதரிசனத்தை உரைக்க முடியும்? உண்மையென்னவென்றால் எந்த மனிதனும் தன்னால் அப்படிய செய்ய முடியாது. ஆகையால், ஏசாயா தானாக அல்லது சுயமாக இந்த

தீர்க்கதரிசனத்தை உரைக்கவில்லை, இதுபோன்ற அற்புதமான தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்த தேவனால் ஏவப்பட்ட பரிசுத்த மனுஷர்களுள் ஒருவர்.

நிச்சயமாகவே இதுபோன்ற காரியங்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தை தான் என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் நிச்சயமாகவே கிறிஸ்துவின் சபை தேவனுடைய தீர்மானத்திற்கேற்ப பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. முதல் நூற்றாண்டில் மனமாற்றமடைந்தவர்கள் ஞானஸ்நானத்திற்கு பிறகு எந்த சபையில் சேர்ந்தார்கள்? என்ற பாடத்தின் அடுத்த படிக்குள் நாம் கடந்து செல்வோம்.

சபை (ராஜ்யம்) அந்த நேரத்திற்கு பிறகு இருக்கின்ற ஒன்றாகவே பேசப்பட்டு வருகிறது.

ரோமர் 14:17ல் நாம் வாசிக்கும்போது தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை இந்த வசனத்தை வெளிப்படுத்த ஏவினபோது ராஜ்யம் அல்லது சபை இருந்ததாக பவுல் நன்றாக அறிந்திருக்கிறார்.

1தெசலோனிக்கேயர் 2:11ல் நாம் வாசிக்கும் போது பவுல் இந்த வார்த்தைகளை எழுதினபோது தேவன் ஜனங்களை சபைக்குள் அல்லது ராஜ்யத்திற்குள் அழைத்துக்கொண்டிருந்தார். இல்லாத ஒன்றிற்கு தேவன் அப்போது அவர்களை அழைத்திருக்க முடியுமா? நிச்சயமாகவே தேவன் பவுல் மூலமாகவும், தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் மூலமாகவும் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தினால் மக்களை அழைத்தார் (11 தெச. 2:14)

கொலோசெயலர் 1:13ல் நாம் வாசிக்கும்போது தேவன் பவுலையும் மற்ற கிறிஸ்தவர்களையும் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்க தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினார் என்று நாம் வாசிக்கிறோம், தேவன் அப்படி செய்வதற்கு சபை என்று ஒன்று நிச்சயமாக இருந்திருக்க வேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷம் 1:9ல் நாம் வாசிக்கும்போது முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய யோவான் யாருக்கு இந்த நூலை எழுதினாரோ அவர்களை தன்னை எப்படி அடையாளப்படுத்துகிறார் என்று தயவு செய்து கவனியுங்கள். அப்போஸ்தலனாகிய யோவான் அந்த கிறிஸ்தவர்களிடத்தில் தன்னை உங்கள் சகோதரனும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் என்று சொல்கிறார். இந்த கிறிஸ்துவின்

அப்போஸ்தலனுக்கு தேவன் இந்த வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தை வெளிப்படுத்த தன்னை ஏவின அந்த சமயத்தில் **சபை** அல்லது **ராஜ்யம்** இருந்ததை யோவான் அறிந்திருந்தார்.

அப். 11:15ல் நாம் வாசிக்கும்போது கொர்நேலியு மற்றும் அவர் வீட்டாரனைவரின் மீதும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என்று பேதுரு குறிப்பிடுகிறார். தேவனால் ஏவப்பட்ட தாசன் இந்த சம்பவத்தை எதினோடு ஒப்பிடுகிறார். நாம் ஏற்கனவே அப். 2:1-4ல் நாம் பார்த்தபடி தானும், கிறிஸ்துவின் மற்ற அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றதோடு ஒப்பிடுகிறார். தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருமென்று இயேசு சொன்னது இதுதான்.

மேலும் அப். 11:15ல் பேதுரு மேலும் என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள். பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே அவர்கள் மேலும் இறங்கினார் என்று அப்போஸ்தலன் சொன்னார். ஆதியிலே என்றால் எப்போது? கிறிஸ்துவின் ராஜ்யம் தொடங்கப் பட்டபோது அதாவது கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது! இது கிறிஸ்துவின் சபை பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கி.பி. 30ல் ஸ்தாபிக்கப்பட்டது என்பதற்கான கூடுதலான சான்றாகும். தேவன் இந்த காரியத்தைத்தான் அப். 2 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறார்.

இந்த நேரத்தில் நம் மனதில் கேள்வி எழும்புவது இயற்கையே.

சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு ஏன் அதிக சமயத்தை செலவழிக்க வேண்டும்?

முதலாவது, புதிய ஏற்பாட்டின் ஒன்றான மெய் சபையை அடையாளம் காண்பதற்காக! அப்போது எத்தனை சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன? ஒன்றே ஒன்றுதான் அது கிறிஸ்துவின் சபை. இன்று மத உலகில் காணப்படுகின்ற எல்லா மார்க்க பிரிவினை சபைகளும் பல்வேறு இடங்களில் மனிதர்களால் தொடங்கப்பட்டது. எனவே அவைகள் கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையாக இருக்கமுடியாது! கர்த்தருக்கு சித்தமானால் நாம் அடுத்த பாடத்தை சேர்ந்து படிக்கும்போது நாம் இன்னும் தெளிவாகப் பார்க்கலாம்.

இரண்டாவது, அதிக நேரம் செலவழித்து சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நிரூபிக்க இரண்டாவது காரணம் ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை என்ற கள்ளப் போதகத்தை முறியடிப்பதற்காக அந்த கொள்கையை விவரமாகப் படிப்பதற்கு நமக்கு நேரமில்லை. ஆயினும் அதைப் பற்றி அநேக காரியங்களை கவனிப்பது உதவியாக இருக்கும். இந்த ஆயிர வருட அரசாட்சி கொள்கைக்கு ஒரு சிறு விளக்கம் கொடுத்து நாம் இந்த

கொள்கையைப் பற்றிப் பார்க்கத் தொடங்குவோம் இந்த கொள்கையை ஆங்கிலத்தில் "Premillennialism" என்று அழைப்பார்கள் இது மூன்று வார்த்தைகளின் கூட்டாகும் அதாவது, "Pre"என்றால் முன்பு; "millenniam" "lism"என்றால் ஆயிரம் வருடங்கள் என்றால் கோட்பாடு அல்லது கொள்கை என்று அர்த்தம். இந்த மூன்று வார்தைகளையும் சேர்த்துப்பார்த்தால் இது ஆயிர வருடம் சம்பந்தமான கொள்கை என்று விளக்கப்படும். குறிப்பாக இந்த ஆயிர வருட கொள்கை ஆயிர வருட' காலத்திற்கு முன்பு நம்முடைய கர்த்தரின் வருகை சம்பந்தமான கொள்கை.

இவைகளை மனதில் கொண்டு இந்த கொள்கையின் சில முக்கிய கருத்துக்களை சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். இந்த கொள்கையை நம்பும் அநேகர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்படி வந்தார். ஆனால், யூதர்கள் அவரை புறக்கணித்து சிலுவையிலறைந்தார்கள். எனவே இயேசு தான் திட்டமிட்டபடி தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவில்லை.

மேலும் இந்த கொள்கையைப் போதிப்பவர்கள் இயேசு மறுபடியும் வந்து தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று சொல்கிறார்கள். அவர் சரீரப்பிரகாரமாக எருசலேமுக்கு வந்து தாவீதின் சிங்காசனத்தில் ஆயிர வருட அரசாட்சி நடத்துவார் என்றும் சொல்கிறார்கள்.

நாம் மேலும் ஒரு படி முன்னே செல்லுவோம். இந்த ஆயிர வருட அரசாட்சிக் கொள்கை இரண்டு முக்கியக் கருத்துக்களாக சுருக்கப்படும்.

1. முதலாவது இயேசு இந்த பூமிக்கு முதன் முறையாக வந்தபோது தான் திட்டமிட்டிருந்த ராஜ்யத்தை ஸ்தாபிக்க தவறிவிட்டார்.

2. இரண்டாவது, இயேசு தன்னுடைய இறுதி வருகையிலே எருசலேமுக்கு சென்று தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்து தாவீதின் சங்காசனத்தில் ஆயிரம் வருடங்கள் அரசாட்சி செய்வார்.

நாம் அநேக வசனப்பகுதிகளைப் பார்த்திருக்கிறபடி இயேசு இந்த உலகத்திற்கு முதன்முறையாக வந்த போது தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் தோல்வி அடையவில்லை. அதற்கு மாறாக தெளிவாக தம்முடைய ராஜ்யமாகிய சபையை கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபித்தார். ஆகவே, நம்முடைய இரட்சகர் மறுபடியும் இந்த பூமிக்கு தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வரப்போவதில்லை. முதல் நூற்றாண்டிலிருந்து தம்முடைய ராஜ்யத்திற்கு அவர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார். (வெளி. 17:14).

மேலும் தேவன் ஒரு காரியத்தை தெளிவுபடுத்துகிறார் அதென்னவென்றால் இயேசு தன்னுடைய இரண்டாம் வருகையிலே இந்த பூமியிலே கால் வைக்க போவதில்லை 1 தெசலோனிக்கேயர் 4:16,17 வசனங்களை வாசிக்கும்போது ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவர்ர். அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். எனவே இயேசு இந்த பூமிக்கு மறுபடியும் ராஜ்யத்தை ஸ்தாபிக்க வரமாட்டார். அதை ஏற்கனவே முதல் நூற்றாண்டில் ஸ்தாபித்து விட்டார்.

எனவே, இவ்வளவு நேரம் கிறிஸ்துவின் சபையாகிய ஒன்றான மெய் சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்காகவும் ஆயிர வருட அரசாட்சி கொள்கை தவறு என்பதை நிரூபிப்பதற்காகவும் நேரத்தை செலவு செய்தோம்.

கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த மாதம் முதல் நூற்றாண்டில் மனமாற்றமடைந்தவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு எந்த சபையில் சேர்ந்தார்கள்? என்ற கேள்விக்கு சிறப்பான முறையில் பதில்களைப் பார்ப்போம். அதுவரை நாம் ஒவ்வொருவரும் அதிகமாக வேதாகமத்தைப் படிப்போம்.

**BENNY** **CHARLIE DI PALMA**

## யாக்கோபு நிருபத்தில் நாவு

1. *அது ஒரு சிறிய அவயம். 3:5*
2. *அது ஒரு நெருப்பு. 3:6*
3. *அது அடங்காதது. 3:8*
4. *அது பொல்லாங்குள்ளது. 3:8*
5. *அது அநீதி நிறைந்தது. 3:6*
6. *அது பொய் சொல்லுகிறது. 3:14*
7. *அது மனுஷனைச் சபிக்கிறது. 3:9*
8. *அது விஷம் நிறைந்தது. 3:8*
9. *அது பெருமை நிறைந்தது. 3:6*
10. *அது கறைப்படுத்துகிறது. 3:6*
11. *அது ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறது. 3:6*
12. *அது தேவனைத் துதிக்கிறது. 3:9*

# நீ அங்கே கன்மலையில் நில்லு...

அனுதினமும் ஆதரித்து இரட்சிப்பையும், ஈவுகளையும் உங்களுக்கு ஊக்கமாகவும் எங்கும் ஏற்றமிரக்கமில்லாமல் ஐக்கியப்பட்டவர்களுக்கும், ஒருமனப்பட்டவர்களுக்கும், ஔவிதமாக கொடுத்து கொண்டு இருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். "இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிக்கிறார்" என்ற இந்த வார்த்தையை கேட்காத மனுக்குலம் நிச்சயமாக இருக்க முடியாது. ஏனெனில், இன்றைக்கு உலகமெங்கும் அந்த வார்த்தை எந்த விதத்தில் அறிவிக்கப்படுகிறது என்பதை தான் நாம் கவனித்து பார்க்க வேண்டும்.

இன்றைய உலகிலும் நம்முடைய சமுதாயத்திலும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற போர்வையில் இருக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு பஞ்சமில்லை, ஏனெனில் தங்கள் கள்ளத் தரிசனத்தின் மூலம் மக்களை ஏமாற்றி பிழைப்பை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களுடைய வார்த்தைக்கு இந்த ஜனங்களும் மதிமயங்கி செவி கொடுத்து நரகத்தை நோக்கி கைதட்டலோடும், ஆரவாரத்தோடும், உற்சாகத்தோடும் போய் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த கள்ளத் தீர்க்கதரிசிகள் அப்படி என்னதான் போதித்து இவர்களை விழவைத்து இருக்கிறார்கள் என்றால் சில கள்ளப் போதகராகிய ஊழியக்காரர்கள் "அனுதினமும் தேவன் எங்களுடைய வீட்டிற்கு வந்து ஊழிய ஆலோசனைகளைக் கொடுப்பார் என்றும், நாங்கள் தேவனிடத்தில் முகமுகமாய் பேசுவோம் என்றும், அற்புதங்களை செய்யும் சக்தியை தேவன் எங்கள் தலையில் கைகளை வைத்து கொடுத்தார்" என்று பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்கள். இதை வாய்பிளந்து கேட்டு கொண்டு இருக்கும் ஜனங்கள் "இவர் மிகப்பெரிய பரிசுத்தவான்" இவர் சொல்வதெல்லாம் உண்மையாகத்தான் இருக்கும் என்று பயத்தோடும் பக்தியோடும் அந்த ஊழியருக்கு கொத்தடிமையாக மாறிப்போகிறார்கள்.

இப்படிப்பட்ட ஊழியர்கள் வேதாகமத்தில் இருக்கும் சங்கீத புஸ்தகத்தையும், நீதிமொழிகளையும் எடுத்து அதிலிருந்து அந்த ஜனங்களின் மனத்துக்கு பிரியமான வசனத்தை பேசி அந்த ஜனங்களை மகிழ்வித்து காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். சில சமயம் அந்த குறிப்பிட்ட கள்ளத்தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை குறித்து பேசுகின்ற போது கிறிஸ்துவை குறித்து ஜனங்கள் அழுகிறார்களோ இல்லையோ, அழுகையோடு பேசும் ஊழியரின் முகத்தை பார்த்து அழும் கூட்டங்கள் ஏராளம் இதற்கு என்ன காரணம் என்பதை அப்போஸ்தலனாகிய

பவுல் எழுதுவதை கவனியுங்கள் "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான் (2கொரி 4:4) என்கிறார்.

இந்த கள்ளப்போதகர்கள் தேவனை பார்த்தேன் என்றும் அதினால் இரட்சிக்கப்பட்டேன் என்று மேடைக்கு மேடை ஏறி அலுப்பில்லாமல் சொல்கிறார்களே இதெல்லாம் உண்மையா என்று நம்முடைய வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதையும் நாம் கற்றுக்கொள்வோம்.

***<u>நீ அங்கே கன்மலையில் நில்லு</u>***


எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்த இஸ்ரவேல் ஜனங்களை தேவனுடைய பலத்த கரத்தினால் விடுதலை செய்து கானாவை நோக்கி அந்த திரளான ஜனங்களை வழி நடத்தி கொண்டு போனவன் தான் தேவதாசனாகிய மோசே. இந்த மோசே வேதாகமத்தில் "தேவனுடைய சிநேகிதன்" என்றும், "தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்" என்றும் "பூமியிலே சாந்த குணமுள்ள மனிதன்" என்றும் பல சிறப்பு அடைமொழிகளை பெற்றவன் தான் மோசே.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் இளைபாறிக் கொண்டு இருந்த போது இவன் தேவனுடைய அழைப்பிலே சீனாய் மலையில் ஏறி தேவ பிரமாணத்தை வாங்கி கொண்டு இருந்த நேரத்தில் தேவனிடத்தில் தனக்கென்று ஒரு விண்ணப்பத்தை வைத்தான் அது என்னவென்றால், "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத். 33:18) என்றான்.

மோசேயிடம் தேவன் முட்செடியில் பேசினது முதல் சீனாய் மலையில் பேசினது வரைக்கும நாம் உற்று கவனித்தால் தேவனுடைய வார்த்தையை மாத்திரமே மோசே கேட்டான் அவருடைய உருவத்தையோ, மகிமையையோ அவன் பார்க்கவில்லை (யாத். 3:1-4, 19:19, 33:9, எண் 7:89) அது மாத்திரம் அல்ல அவன் அழைத்து வந்த இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுடைய வார்த்தையை மாத்திரமே கேட்டார்கள் ஒரு ரூபத்தையும் அவர்கள் காணவில்லை (உபா. 4:32) என்று மோசே கூறுகிறார்.

இந்த நேரத்தில் தான் மோசே தேவனை பார்க்க வேண்டும் என்று தேவனிடத்தில் விண்ணப்பம் வைத்தான் அதற்கு தேவன் "நீ என் முகத்தை காணமாட்டாய் ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" (யாத். 33:20) என்றார். தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்ட பரிசுத்தவானாகிய மோசேயிடம் தேவன் என்னை பார்க்க முடியாது என்று திட்டவட்டமாகவே கூறுகின்றார்.

தொடரும்.. **N. *பர்னபாஸ்,*** திருப்பூர்.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661 / 87 - New Delhi

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் **திருமறை தியானம்**
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




# S.S. Music TV ல

## திருமறை தியானம்

பிரதி திங்கட்கிழமை காலை 7:00 - 7:30 மணி

# தமிழன் டிவி யில்

## திருமறை தியானம்




பிரதி சனிக்கிழமை காலை 7:15 - 7:30 மணி
பிரதி ஞாயிறு இரவு 9:45 - 10:00 மணி

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**

**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.